**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590

**ஆணை நாள்: 12.09.2019 (முற்பகல்)**

**முன்னிலை**

**திரு ச.செல்வராஜ், எம்.ஏ., பி.எட்.,**

**மாநில தகவல் ஆணையர்**

•••••••••

**வழக்கு எண்.SA 2766/E/2017**

Thiru S.Gothandaraman ... மேல்முறையீட்டாளர்

Vs.

பொதுத் தகவல் அலுவலர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
திருச்சி கிழக்கு வட்டம்,
திருச்சி மாவட்டம். ... பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 01.09.2016 |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | 03.12.2016 |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 07.04.2017 |

******

**ஆணை**

இன்று (12.09.2019) முற்பகலில் இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மேல்முறையீட்டாளர் Thiru S.Gothandaraman ஆஜராகவில்லை. பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர், திருமதி ஆ.கவிதா தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், திருச்சி மேற்கு வட்டம், திருச்சி மாவட்டம் ஆஜரானார்.

2. மேல்முறையீட்டாளர் 01.09.2016 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கீழ்க்கண்டவாறு தகவல் கோரி, மாவட்ட ஆட்சியர், திருச்சி என விலாசமிட்டுத் தாக்கல் செய்துள்ளார்:

1. Is free items like fan, mixer grinder, grinder procured to my ration card No.17/G/0583230, Ward No.42 and Ration Shop No.AE018.
2. If procured, where this items have gone.
3. If not procured, the reason for not procuring.
4. No. of eligible ration cards available at Trichy district for issue of free items.
5. No. of free items received.
6. No. of ration cards are left to issue free items at Trichy district.
7. When the balance ration cards will get the free items.
8. To whom I have to approach to get my free items.

3. மேல்முறையீட்டாளரின் மனுவானது 12.09.2016 தேதியிட்ட கடிதம் வாயிலாகப் பொதுத் தகவல் அலுவலர், வட்டாட்சியர் அலவலகம், திருச்சி கிழக்கு அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேல்முறையீட்டாளருக்கு தேதியிட்ட கடிதம் வாயிலாகப் பொதுத் தகவல் அலுவலரால் தகவல் வழங்கப்பட்டுள்ளது. பொதுத் தகவல் அலுவலரால் தான் கோரிய தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை வழங்குமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 03.12.2016 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன்கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர், மாவட்ட ஆட்சியர், திருச்சி அவர்களுக்கும், 07.04.2017 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன்கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கும் தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (12.09.2019) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மேல்முறையீட்டாளருக்கு 03.09.2019 தேதியிட்ட கடிதம் வாயிலாக உரிய தகவல் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து உரிய ஆவணங்களை ஆணையத்தின் முன்பு தாக்கல் செய்தார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

5. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் ஆஜராகாத நிலையில், பொதுத் தகவல் அலுவலரால் ஆணையத்தின் முன்பு தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், மேல்முறையீட்டாளருக்குப் பொது அதிகார அமைப்பினரின் ஆவணங்களின் அடிப்படையில் வழங்கக்கூடிய தகவலனைத்தும் 03.09.2019 தேதியிட்ட கடிதம் வாயிலாக வழங்கப்பட்டுள்ளதென்பது தெரிய வருகிறது. இதனை ஆணையம் பதிவு செய்து,

இவ்வழக்கில் மேலும் விசாரணை தேவையில்லையென முடிவு செய்து இவ்வழக்கு இத்துடன் முற்றாக்கப்படுகின்றது.

**ஒம்/- ச.செல்வராஜ்**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA 2766/E/2017</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
திருச்சி கிழக்கு வட்டம்,
திருச்சி மாவட்டம்.

பொதுத் தகவல் அலுவலர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
திருச்சி மேற்கு வட்டம்,
திருச்சி மாவட்டம்.

**<u>மனுதாரர்</u>**

Thiru S.Gothandaraman,
8/2, Sundar Nagar,
5th Cross,
Tiruchirapalli - 620 021.

Copy to: Judgement File.
16/09/19